ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 7.1 – உண்ணிலாவிய

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 7.1 – உண்ணிலாவிய

‡ உண்ணிலாவிய ஐவரால் குமை தீற்றி ⋆
என்னை உன் பாத பங்கயம் ⋆
நண்ணிலா வகையே ⋆
நலிவான் இன்னும் எண்ணுகின்றாய் ⋆
எண் இலாப் பெரு மாயனே ! ⋆
இமையோர்கள் ஏத்தும் உலக மூன்றுடை ⋆
அண்ணலே ! அமுதே ! அப்பனே ! ⋆
என்னை ஆள்வானே ! ‖ **7.1.1** ‖

என்னை ஆளும் வன் கோ ஓர் ஐந்திவை பெய்து ⋆
இராப் பகல் மோது வித்திட்டு ⋆
உன்னை நான் அணுகா வகை ⋆
செய்து போதி கண்டாய் ⋆
கன்னலே ! அமுதே ! கார் முகில் வண்ணனே ! ⋆
கடல் ஞாலம் காக்கின்ற ⋆
மின்னு நேமியினாய் ! ⋆
வினையேனுடை வேதியனே ! ‖ **7.1.2** ‖

வேதியா நிற்கும் ஐவரால் ⋆
வினையேனை மோதுவித்து ⋆
உன் திருவடிச் சாதியா வகை ⋆
நீ தடுத்தென் பெறுதி அந்தோ ⋆
ஆதி ஆகி அகல் இடம் படைத்து ⋆

உண்டுமிழந்து கடந்திடந்திட்ட ⋆
சோதி நீள் முடியாய் ! ⋆
தொண்டனேன் மதுசூதனனே ! ॥ **7.1.3** ॥

சூது நான் அறியா வகை ⋆
சுழற்றி ஓர் ஐவரைக் காட்டி ⋆
உன் அடிப் போது நான் அணுகா வகை ⋆
செய்து போதி கண்டாய் ⋆
யாதும் யாவரும் இன்றி நின் அகம் பால் ஒடுக்கி ⋆
ஓர் ஆலின் நீள் இலை ⋆
மீது சேர் குழவி ! ⋆
வினையேன் வினை தீர் மருந்தே ! ॥ **7.1.4** ॥

தீர் மருந்தின்றி ஐந்து நோய் அடும் ⋆
செக்கில் இட்டுத் திரிக்கும் ஐவரை ⋆
நேர் மருங்குடைத்தா அடைத்து ⋆
நெகிழ்ப்பான் ஒக்கின்றாய் ⋆
ஆர் மருந்தினி ஆகுவர் ⋆
அடல் ஆழி ஏந்தி அசுரர் வன் குலம் ⋆
வேர் மருங்கறுத்தாய் ! ⋆
விண் உளார் பெருமானேயோ ! ॥ **7.1.5** ॥

விண் உளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறும் ⋆
ஐம் புலன் இவை ⋆
மண்ணுள் என்னைப் பெற்றால் ⋆
என் செய்யா மற்று நீயும் விட்டால் ⋆
பண் உளாய் ! கவி தன் உளாய் ! ⋆
பத்தியின் உள்ளாய் ! பரம் ஈசனே ⋆

வந்தென் கண் உளாய் ! நெஞ்சுளாய் !⋆
சொல் உளாய் ! ஒன்று சொல்லாயே ॥ **7.1.6** ॥

ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கிலாத⋆
ஓர் ஐவர் வன் கயவரை⋆
என்று யான் வெல்கிற்பன்⋆
உன் திருவருள் இல்லையேல்⋆
அன்று தேவர் அசுரர் வாங்க⋆
அலை கடல் அரவம் அளாவி⋆
ஓர் குன்றம் வைத்த எந்தாய் !⋆
கொடியேன் பருகின் அமுதே ! ॥ **7.1.7** ॥

இன் அமுதெனத் தோன்றி⋆
ஓர் ஐவர் யாவரையும் மயக்க⋆
நீ வைத்த முன்ன மாயம் எல்லாம்⋆
முழு வேர் அரிந்து⋆
என்னை உன் சின்னமும் திரு மூர்த்தியும்⋆
சிந்தித்தேத்திக் கை தொழவே அருள் எனக்கு⋆
என் அம்மா ! என் கண்ணா !⋆
இமையோர் தம் குல முதலே ! ॥ **7.1.8** ॥

குல முதல் அடும் தீவினைக்⋆
கொடு வன் குழியினில் வீழ்க்கும் ஐவரை⋆
வல முதல் கெடுக்கும்⋆
வரமே தந்தருள் கண்டாய்⋆
நில முதல் இனி எவ் உலகுக்கும்⋆
நிற்பன செல்வன எனப்⋆

பொருள் பல முதல் படைத்தாய் !⋆
என் கண்ணா ! என் பரம் சுடரே ! ॥ **7.1.9** ॥

என் பரம் சுடரே ! என்றுன்னை அலற்றி⋆
உன் இணைத் தாமரைகட்கு⋆
அன்புருகி நிற்கும்⋆
அது நிற்கச் சுமடு தந்தாய்⋆
வன் பரங்கள் எடுத்து⋆
ஐவர் திசை திசை வலித்தெற்றுகின்றனர்⋆
முன் பரவை கடைந்து⋆
அமுதம் கொண்ட மூர்த்தி ஓ ! ॥ **7.1.10** ॥

‡ கொண்ட மூர்த்தி ஓர் மூவராய்க்⋆
குணங்கள் படைத்தளித்துக் கெடுக்கும்⋆
அப்புண்டரீகக் கொப்பூழ்⋆
புனல் பள்ளி அப்பனுக்கே⋆
தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்⋆
சொல் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
கண்டு பாட வல்லார்⋆
வினை போம் கங்குலும் பகலே ॥ **7.1.11** ॥

அடிவரவு — உண்ணிலா என்னை வேதியா சூது தீர் விண்ணுளார் ஒன்று இன்னம் குலமுதல் என் கொண்ட கங்குலும்

உண்ணிலாவிய முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்